# பிடிவாதம்...

மஹாதேவன்

அம்மா ...தன்னுடைய 83வது வயதில் கூட சுறுசுறுப்பாய் வீட்டை வலம் வந்து கொண்டிருப்பவள்.... மார்கழிப்பனியைக்கூட பொருட்படுத்தாமல், சில்லென்ற தண்ணீரில் 5 மணிக்கே தன்னை தயார் படுத்திக்கொண்டு, தலையில் ஆரஞ்சு நிற ஸ்கார்ப் கட்டியபடி , வாசல் கோலம் போடுவாள்...நடுக்கும் குளிர் ஆனாலும் , கோலம் நான் தான் போடுவேன் என்ற பிடிவாதம்.

அம்மா இன்றில்லை...வேலை பார்க்கும் காலத்திலேயே **தான்** நினைத்ததை எப்படியாவது செய்துவிடவேண்டும் என்ற குணம் கொண்டவள் ...

டயபெடீஸ்க்கு மருந்து எடுத்துக்கொண்டிருந்தாலும், வாரம் ஒரு முறையாவது பேரனிடம் கெஞ்சி ரவா தோசையும், ஒரே ஒரு குளோப் ஜாமூனும் வாங்கி வரச்சொல்லி, ஆசையாய் சாப்பிடும் அந்த பிடிவாதம் அவ்வப்பொழுது குடும்பத்திலும் ஊடுருவும்.

நானும் மனைவியும் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால், அதன் தாக்கம் குறைவாய் தெரிந்தாலும், கூடவே இருக்கும் என் இரண்டு பசங்களுக்கும் அது தினசரி போராட்டமாய் இருந்தது.

கைநிறைய பென்ஷன் வாங்கும் ஒரு ஓய்வு பெற்ற **அரசு** ஊழியரிடம், **நீங்கள்** எதிர்பாராத பிடிவாத குணங்கள், என் அம்மாவிடம் நிறையவே இருந்தது.

பத்து வருடம் முன்பு, **அம்மாவிற்கு** காலில் ஒரு நோய்தொற்று அறுவை சிகிச்சை நடந்தது. அப்பா ஒரு முறை அம்மாவிற்காக பரிசளித்த முருகன் டாலரை மருத்துவ பணியாளர்கள் **எடுக்க** முற்பட, அதை கழட்டவே மாட்டேன், என் உயிர் போகும்பொழுது மட்டுமே அதை கழட்டுவேன் என்று மிகப்பிடிவாதமாய், லோக்கல் அனஸ்தீசியா கொடுக்கும் வரை பிடிவாதம் பிடித்தவள் அம்மா.

வயது ஆக ஆக, பிடிவாதத்தின் உச்சம் தொட ஆரம்பித்தாள் அம்மா...அது தனக்கான இருப்பை அந்த வீட்டில் நிலைநிறுத்த என்ற நிலை மாறி, கூட இருப்பவர்களின் நிம்மதி தொலைக்கும் ஒரு அன்றாட நிகழ்வாய் மாற ஆரம்பித்தது.

ஒரு நாள் அதிகாலை, என் இரண்டு பசங்களும் தொலைபேசியில் புலம்பியதின் சாராம்சம், அம்மா அந்த வீட்டின் பிரச்னைக்கான மைய புள்ளியாய் மாறிவிட்டாள் என்பதே...

இதற்கு முடிவு காணவேண்டிய நிலைக்கு நானும் என் மனைவியும் தள்ளப்பட்டோம் ...

இதற்கு ஒரே வழி, அம்மாவை கொஞ்ச காலம் பிரச்னையிலிருந்து தள்ளி வைப்பது .... என்ன செய்யலாம் என்ற யோசனையின் முடிவாய் , எங்கள் நினைவுக்கு வந்தது எங்கள் உறவினர் நடந்து ஓல்ட் ஏஜ் ஹோம் ....சகல வசதிகளும் நிறைந்த ஒரு பாதுகாப்பான இடம் ...முடிவு செய்து அம்மாவிடவும் நாசூக்காய் சொல்லியும் விட்டோம்.

கத்தி கூப்பாடு போட்டு முடிந்த வரை போகாமல் இருக்க செய்வாள் என்ற எங்கள் நினைப்புக்கு மாற்றாய், அம்மா அமைதியாய் இருந்தாள். அன்றிலிருந்து அம்மாவிடம் நிறைய மாற்றம் தெரிந்ததை தொலைபேசி மூலம் தெரிந்து கொண்டேன்.

ஒரு வேளை, இது ஒரு விதமான நாடகமாய் இருக்கும் என்று நினைத்தேன். அதற்காக வேலையை தள்ளி போடாமல், அம்மாவை ஓல்ட் ஏஜ் ஹோம் அனுப்பும் வேலையை துரிதமாய் செய்ய ஆரம்பித்தேன்.



த.மகாதேவன் கட்டபொம்மனின் கைதின் பின்புலத்தில் , கட்டுக்கட்டாய் புனையப்பட்ட கதைக்களமாம் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிறந்து, திருச்சியை வாழ்விடமாய் கொண்டிருப்பவர்....மலேஷியாவில் பணியாற்றிய பத்து வருட காலம் , டோக்கியோ தமிழ் சங்கத்துடன் கலை இலக்கிய ஒருங்கிணைப்பாளராய் 2020ல் ஹாஃப் ஷோரில் இணைந்து , இரண்டு வருடமாய் அமீரகத்தில் ஒரு மென்பொருள் நிறுவன அலுவலக மேலதிகாரியாய் பணி புரிபவர் ...பாடகர்,கவிஞர்,சிறுகதை எழுத்தாளர்

மனைவியை விட்டுவிட்டு, நான் மட்டும் எமெர்ஜென்சி லீவ் எடுத்து, வீடு வந்து சேர்ந்தேன்,

மறுநாள் காலை, மூத்தவனோடு அந்த ஓல்ட் ஏஜ் ஹோம் சென்றேன்.

அம்மாவிற்கான அறை தயார் நிலையில்.... காற்றோட்டமான அறை ...வலது பக்க ஜன்னல் வழியே பார்த்தால், அந்த பூந்தோட்டம் மிக அழகாக இருந்தது. அங்கு இருப்பவர்கள் எல்லோர் முகமும் பிரகாசமாய் இருப்பதாய் உணர்ந்தேன் ...மனம் கொஞ்சம் சமாதானம் அடைந்தது.

உறவினரிடம் கிளம்பும் போது சொன்னேன்...இன்னும் ரெண்டு வருஷம் மாமா...வீட்டு கடன் அடைஞ்சதும் நான் ஊருக்கு திரும்பிடுவேன் ...அதுக்கப்புறம் அம்மா என்கூடதான் வச்சுப்பேன்.... ஒரு ரெண்டு வருஷம் பத்திரமாய் பாத்துக்கங்க...பேசும்பொழுதே கண்களில் கண்ணீர் வர, நா தழு தழுக்க நாசூக்காய் அழுகையை தவிர்த்தேன்.

கிளம்பி வரும்பொழுது மூத்தவன் கேட்டான்.... நாங்க மேனேஜ் பண்ணிக்கிறோம்பா ...பாட்டி எங்க கூட இருக்கட்டும் ப்ளீஸ் என்றவனிடம் , மெதுவாய் சொன்னேன் ....பாட்டிக்கும் ஒரு சேன்ஜ் இருக்கட்டும்டா...

ஷி நீட்ஸ் எ ஷாக் டிரீட்மென்ட் ...என்றதும் அவன் முகத்தில் கவலை ரேகை படர்ந்தது எனக்கு நன்றாகவே தெரிந்தது.

மூன்றாம் நாள் காலை...ஹோம் செல்வதற்காக ஆம்புலன்ஸ் தயாராய் வந்தது...அம்மா என் காரில் வர மாட்டேன், ஆம்புலன்ஸ் தான் வேண்டும் என மீண்டும் பிடிவாதம் பிடித்ததால், இந்த ஏற்பாடு.

அம்மா அதிகாலை எழுந்து, சுவாமி படம் முன் நின்று எதோ வேண்டினாள். பிறகு, குளிக்க சென்றாள் ...

நானும் பசங்களும் தயாராய் காத்திருக்க, அம்மா ரூமிலிருந்து வரவே இல்லை ...

அரை மணி நேரம் காத்திருந்து வராததால், ரூமினுள் சென்று பார்த்தேன்...

அம்மா படுக்கையில் படுத்திருந்தாள்...அவளுடைய முருகன் டாலர் தரையில் கிடந்தது ...

